வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: சரவணகுமார்

நாள்: 26.11.2024 நேரம்: மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

அரசியல் சாசன லட்சியங்களை, நாட்டு மக்கள் தங்களின் நடத்தையின் ஒருபகுதியாக உள்வாங்கிக் கொள்ள வேண்டும் என, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

அரசியல் சாசனம் ஏற்கப்பட்டதன் 75ஆம் ஆண்டை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்கள் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

வங்கக் கடலில் உருவாகி உள்ள ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் நாளை புயலாக வலுப்பெற்று, அதற்கு அடுத்த 2 நாட்களில், தமிழக கடலோரப் பகுதகளை நோக்கி நகரக்கூடும் என எதிர்பார்க்கப் படுகிறது.

கனமழை காரணமாக, நாளை புதுச்சேரி, மற்றும், காரைக்காலில், அனைத்து பள்ளி-கல்லூரிகளுக்கும், விடுமுறை அறிவிக்கப் பட்டுள்ளது.

---

*அரசியல் சாசன தினம்* 1 (18)

அரசியல் சாசன லட்சியங்களை, நாட்டு மக்கள் அனைவரும் தங்களின் நடத்தையிலேயே உள்வாங்கிக் கொண்டு, அடிப்படைக் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்றும், 2047ஆம் ஆண்டிற்குள்,

முன்னேறிய இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற தேசிய இலக்கை எட்டப் பாடுபட வேண்டும் என்றும், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார். சம்விதான் சதன் என்னும் பழைய நாடாளுமன்ற கட்டிடத்தின் மைய மண்டபத்தில் இன்று நடைபெற்ற, அரசியல் சாசன தின விழாவில் உரையாற்றிய அவர், வாழும் முற்போக்கு ஆவணமான அரசியல் சாசனம் மூலமாகவே, சமூக நீதி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி போன்ற இலக்குகளை நாடு எட்டி வருவதாக கூறினார்.

சாதாரண மக்களின் வாழ்க்கையை எளிதாக்கப் பாடுபடுவதே, அரசியல் சாசனப்படி, நிர்வாகத் துறை, சட்டமியற்றும் துறை, மற்றும், நீதித்துறையின் கூட்டுக் கடமை என்று, குடியரசுத் தலைவர் தெரிவித்தார். நலிவடைந்த பிரிவினர் உட்பட, சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களின் நலன்களை மேம்படுத்த, மத்திய அரசு அண்மைக் காலங்களில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து இருப்பதாக அவர் கூறினார். நாட்டில் உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப் படுவதையும், ஏழைகளுக்கு, சொந்த வீடு கட்டித் தரப்படுவதையும், மகளிர்



இடஒதுக்கீட்டிற்கான நாரி சக்தி வந்தன் போன்ற சட்டங்களையும், அவர் பாராட்டினார்.

அரசியல் சாசனத்தின் முன்னுரையில் இடம்பெற்றுள்ள நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் லட்சியங்கள், வளமாக வாழ்வதற்கான வாய்ப்புக்களை நாட்டு மக்களுக்கு வழங்கும் அதேவேளை, ஒவ்வொருவரும்,மற்றவர்கள் மீது பரஸ்பர அக்கறை செலுத்த வேண்டும் என்னும் பொறுப்பையும் விதிப்பதாக, குடியரசுத் தலைவர் கூறினார். இதர பிற்பட்ட வகுப்பினருக்கான தேசிய ஆணையத்திற்கு, அரசியல் சாசன அந்தஸ்து வழங்கப் பட்டதையும், புதிய கிரிமினல் சட்டங்கள் கொண்டு வரப்பட்டதையும் அவர் சுட்டிக் காட்டி, இதற்கென நாடாளுமன்ற உறுப்பினர்களை பாராட்டினார்.

இந்தியா தற்போது புதிய எண்ணங்களுடன் உலக அளவில் புதிய அடையாளம் பெற்று வருவதாகவும், விஷ்வ பந்துவாக நாடு செயல்பட்டு வருவதாகவும், குடியரசுத் தலைவர் கூறினார்.

குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் இவ்விழாவில் பேசுகையில், உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவிற்கு, இன்றைய தினம் முக்கிய மைல்கல் என்றார். உள்கட்டமைப்பு, டிஜிட்டல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தற்போது இந்தியா பெற்று வரும் அபார வளர்ச்சியை, உலக நாடுகள் அங்கீகரிப்பதாகவும், இந்திய

ஜனநாயகத்தின் அடிப்படையே அரசியல் சாசனம்தான் என்பதற்கு, இந்த சாதனைகளே சாட்சி என்றும் அவர் குறிப்பிட்டார். அரசியல் சாசனத்தின் அடிப்படை மாண்புகளை போற்றி, அதன்படி நடப்பதற்கு மீண்டும் உறுதி ஏற்பதற்கான தருணம் இது என்றும் அவர் கூறினார்.

விழாவின் போது, அரசியல் சாசனம் ஏற்கப்பட்டதன் 75ஆம் ஆண்டை குறிக்கும் வகையில், நினைவுத் தபால் தலை மற்றும் நாணயத்தை, குடியரசுத் தலைவர் வெளியிட்டார். இந்திய அரசியல் சாசனம் உருவாக்கப்பட்ட விதம் மற்றும் அதன் மகத்தான் பயணம் குறித்த 2 நூல்களும், அரசியல் சாசனத்தின் சமஸ்கிருத மற்றும் மைதிலி மொழிபெயர்ப்பும், விழாவின் போது வெளியிடப்பட்டன.

மக்களவைத் தலைவர் திரு. ஓம். பிர்லா உள்ளிட்டவர்களும் அரசியல் சாசன தின விழாவில் உரையாற்றினர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற இரு அவைகளின் எதிர்கட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் முக்கிய பிரமுகர்கள் பலரும் விழாவில் கலந்து கொண்டனர்.

விழாவில் பங்கேற்ற அனைவரும், குடியரசுத் தலைவர் தலைமையில், அரசியல் சாசனத்தின் முன்னுரையை வாசித்து, உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

----------------------------

மோடி வாழ்த்து (8)

அரசியல் சாசனம் ஏற்கப்பட்டதன் 75ஆம் ஆண்டை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்கள் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்துள்ளார். பல்லாயிரம் ஆண்டுப் பழமையான இந்தியக் கலாச்சாரத்தின் நவீன வெளிப்பாடான நமது அரசியல் சாசனம். நாட்டிற்கே வழிகாட்டும் சுடராகத் திகழ்வதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார். நாடு தற்போது முழு ஆற்றலுடன் முன்னேறி வருவதாகவும், நாட்டின் பன்முகத் தன்மை குறித்து நம் அனைவருக்குமே பெருமை உண்டு என்றும் அவர் கூறியுள்ளார்.

----------------------------

எதிர்கட்சிகள் (17)

அரசியல் சாசனம் ஏற்கப்பட்டதன் 75ஆம் ஆண்டை குறிக்கும் வகையில், நாடாளுமன்ற இரு அவைகளிலும், 2 நாள் சிறப்பு விவாதங்களை நடத்த வேண்டும் என காங்கிரஸ் கோரி உள்ளது. இதுகுறித்து, மாநிலங்களவைத் தலைவரிடம் தாம் வேண்டுகோள் விடுத்து இருப்பதாக, காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, இன்று, நாடாளுமன்றத்திற்கு வெளியே, செய்தியாளர்களிடம் பேசுகையில்

கூறினார். அரசியல் சாசனம், மற்றும், அதன் முக்கியத்துவம் குறித்து, நாடாளுமன்றத்தில் 2 நாள் விவாதிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். திமுக நாடாளுமன்ற உறுப்பினர் திரு. திருச்சி சிவா செய்தியாளர்களிடம் பேசுகையில், அரசியல் சாசனத்தின் 75ஆம் ஆண்டை குறிக்கும் வகையில் விழா நடத்தப் படுவது குறித்து மகிழ்ச்சி வெளியிட்டார். அரசியல் சாசனம் காட்டி உள்ள வழியை அனைவரும் பின்பற்றுவதே, நிஜமான கொண்டாட்டமாக இருக்க முடியும் என்று, மூத்த சமாஜ்வாடி தலைவர் திரு. அகிலேஷ் யாதவ் கருத்து வெளியிட்டார். மக்களால் நிராகரிக்கப்பட்ட கட்சிகள்தான், அரசியல் சாசனம் ஆபத்தில் இருப்பது போல் பொய் பிரச்சாரம் செய்வதாக, மூத்த பிஜேபி தலைவர் திரு. ரவிசங்கர் பிரசாத் செய்தியார்களிடம் பேசுகையில் கூறினார்.

----------------------------

*வானிலை 1 (19)*

நேற்று வங்கக் கடலில் நிலவிய காற்றழுத்தத் தாழ்வு மண்டலம், இன்று, ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, நாகப்பட்டினத்திற்கு தெற்கு-தென்கிழக்கே, 590 கிலோ மீட்டர் தொலைவிலும், புதுச்சேரிக்கு தெற்கு-தென்கிழக்கே, 710 கிலோ மீட்டர் தொலைவிலும், சென்னைக்கு தெற்கு-தென்கிழக்கே, 800 கிலோ மீட்டர் தொலைவிலும் நிலை கொண்டுள்ளது. இது வடக்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, நாளை புயலாக வலுப்பெறக் கூடும் என்றும், அதற்கு அடுத்த 2 நாட்களில், இலங்கை கடலோரப் பகுதிகளை ஒட்டி, தமிழக கடலோரப்

பகுதகளை நோக்கி, நகரக்கூடும் என்றும், சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன்காரணமாக தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், மேலும் சில நாட்களுக்கு மழை நீடிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. இன்றைய தினம், கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், திருச்சி, தூத்துக்குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், கனமழைக்கும், சென்னை, காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர் உள்ளிட்ட மாவட்டங்கள், மற்றும், புதுச்சேரியில், ஓரிரு இடங்களில் மிக கனமழைக்கும், நாகை திருவாரூர், மயிலாடுதுரை மாவட்டங்கள், மற்றும், காரைக்கால் பகுதியில் ஓரிரு இடங்களில், அதி கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வங்கக் கடலில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என

*வானிலை 2 (5)*

அறிவுறுத்தப் பட்டுள்ளனர். ஏற்கனவே ஆழ்கடலுக்கு சென்றுள்ள மீனவர்ள் உடனடியாக கரை திரும்பவும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, தரங்கம்பாடி, மற்றும், காரைக்காலில், தலா 5 செ.மீ மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரியில், 1 செ.மீ மழை பெய்துள்ளது.

-----------------------------

*விடுமுறை* (4)

கனமழை காரணமாக, நாளை புதன் கிழமை, புதுச்சேரி, மற்றும், காரைக்காலில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள்,மற்றும் கல்லூரிகளுக்கு, விடுமுறை அறிவிக்கப் பட்டுள்ளது. மாநில கல்வி அமைச்சர் திரு. நமச்சிவாயம் இன்று இதை அறிவித்துள்ளார்.

-----------------------------

*புதுச்சேரி உறுதிமொழி* (8)

புதுச்சேரியில், சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில், இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி முன்னிலையில், அமைச்சர்கள் திரு. லட்சுமி நாராயணன், திரு. திருமுருகன், சட்டத் துறைச் செயலர் திரு. சத்தியமூர்த்தி உள்ளிட்டோர், அரசியல் சாசன தின உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். வழக்கறிஞர்கள், மற்றும், சட்டக் கல்லூரி, மாணவ-மாணவிகளும் இதில் கலந்து கொண்டனர். தலைமைச் செயலகத்தில், தலைமைச் செயலர் திரு. ஷரத் சௌகான் தலைமையில், அரசியல் சாசன தின உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

-----------------------------

*கூட்டுறவு மாநாடு* (9)

சர்வதேச கூட்டுறவு கூட்டணியின் 5 நாள் உலக கூட்டுறவு மாநாடு, புதுடெல்லியில் நேற்று தொடங்கி நடைபெற்று வருகிறது. பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடக்கி வைத்த இம்மாநாட்டில், உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து, கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகள்

பங்கேற்றுள்ளனர். உலக மக்கள் அனைவருக்கும், அமைதியான, வளமான எதிர்காலம் ஒன்றை கூட்டாக உருவாக்குவதில், கூட்டுறவுத் துறையின் பங்கு குறித்து, இம்மாநாட்டில் விவாதிக்கப் படுகிறது. உலகில் மொத்தமுள்ள கூட்டுறவு அமைப்புகளின் எண்ணிக்கையில் 25 சதவிகிதம் இந்தியாவை சேர்ந்தவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

----------------------------

*பால்வளம்* (12)

இந்திய வெண்மைப் புரட்சியின் தந்தை என போற்றப்படும் டாக்டர் வர்கீஸ் குரியன் பிறந்தநாள், இன்று, தேசிய பால்வள தினமாக கொண்டாடப் படுகின்றது. மத்திய பால்வளம், மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு.ராஜீவ் ரஞ்சன் சிங், புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, தேசிய பால்வள தினவிழாவில் பேசுகையில், உலகிலேயே மிகப் பெரிய பால் உற்பத்தி நாடு இந்தியாதான் என்றும். நாட்டின் மொத்த பொருளாதாரத்தில், கால்நடை பராமரிப்புத் துறையின் பங்கு, குறிப்பிடத்தக்கது என்றும் கூறினார். விழாவின் போது, உள்நாட்டு கால்நடை வளர்ப்பில் சிறந்து விளங்கும் விவசாயிகள், கால்நடைகளுக்கான செயற்கை முறை கருவூட்டலில் சிறந்த விளங்கும் தொழில்நுட்பப் பணியாளர்கள், மற்றும், சிறந்த கூட்டுறவு பால் சங்கங்களுக்கு, தேசிய கோபால் ரத்னா விருதுகள், வழங்கப்பட்டன.

----------------------------

*ஜிதேந்திர சிங் (14)*

மக்களுக்கான சேவை வழங்கும் நடைமுறைகளை மேம்படுத்த, மத்திய அரசு, புவியிடத் தரவுகளை பயன்படுத்தி வருவதாக, மத்திய தகவல்-தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், புவியிடத் தகவல் மேலாண்மை குறித்த, ஐநா பிராந்திய மாநாட்டில் உரையாற்றிய அவர், இந்தியாவில், புவியிடத் தரவுகளும், டிஜிட்டல் சேவை மற்றும் நிர்வாக வசதிகளும் ஒருங்கிணைக்கப் படுவதால், வெளிப்படைத் தன்மை அதிகரித்து, கொள்கை முடிவுகளை மேற்கொள்ளத் தேவையான அகப் பார்வைகளும், திறம்பட்ட முறையில் கிடைப்பதாக கூறினார். ஆசிய-பசிபிக் பிராந்தியத்தின் புவியிடத் தகவல் திறன்களை வலுப்படுத்த, பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில், இந்தியா உறுதி பூண்டுள்ளதாக அவர் தெரிவித்தார். புதுடெல்லி பாரத் மண்டபத்தில் நடைபெறும் இந்த 4 நாள் மாநாட்டில், 30 நாடுகளில் இருந்து, 90 சர்வதேச பிரதிநிதிகளும், 30 இந்திய பிரதிநிதிகளும் பங்கேற்றுள்ளனர்.

-----------------------------

*திரைப்பட விழா (5)*

கோவாவில் நடைபெறும், 55 ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில், இன்றைய தினம், மெல்லிசையின் மன்னர் முகமது ரஃபி, என்ற தலைப்பில் இடம்பெறும் மாஸ்டர் க்ளாஸ் நிகழ்வில், சோனு நிகம், சுபாஷ் கை, அனுராதா போத்வால் உள்ளிட்ட திரையுலக பிரபலங்கள்

பங்கேற்கிறார்கள். இன்று மாலை, இஃபியெஸ்டா என்னும் கலாச்சார விழாவும் இடம்பெறுகிறது.

----------------------------

*நிலக்கரி* (7)

நிலக்கரி படிவுப் பகுதிகளை கையகப்படுத்தி மேம்படுத்துவது தொடர்பான, திருத்த மசோதாவில் இடம்பெற்றுள்ள உத்தேசங்கள் குறித்து, மத்திய நிலக்கரித் துறை அமைச்சகம், பொது மக்களின் கருத்துக்களை நாடி உள்ளது. சட்டத் திருத்த உத்தேசங்கள், அமைச்சகத்தின் அதிகாரப்பூர்வ இணைய தளத்தில் வெளியிடப் பட்டுள்ளன. பொது மக்கள் தங்களின் கருத்துக்களை, மின்னஞ்சல் மூலமாக தெரிவிக்கலாம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

----------------------------

*நீதிமன்றம்* (7)

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு பதிலாக, பழைய வாக்குச் சீட்டு முறையை மீண்டும் கொண்டு வர, தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிடக் கோரும் பொது நலன் மனு ஒன்றை, உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது . நீதிபதிகள், திரு. விக்ரம் நாத், திரு. P.B. வராலே ஆகியோர் அடங்கிய பெஞ்ச், இன்று இவ்வாறு உத்தரவிட்டது. இதே போன்ற மனு ஒன்றை விசாரணைக்கு ஏற்க, ஏற்கனவே கடந்த மார்ச் மாதம், உச்சநீதிமன்றம் மறுத்து விட்டதும் குறிப்பிடத்தக்கது.

----------------------------

மீண்டும் தலைப்புச் செய்திகள்

அரசியல் சாசன லட்சியங்களை, நாட்டு மக்கள் தங்களின் நடத்தையின் ஒருபகுதியாக உள்வாங்கிக் கொள்ள வேண்டும் என, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

அரசியல் சாசனம் ஏற்கப்பட்டதன் 75ஆம் ஆண்டை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்கள் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

வங்கக் கடலில் உருவாகி உள்ள ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் நாளை புயலாக வலுப்பெற்று, அதற்கு அடுத்த 2 நாட்களில், தமிழக கடலோரப் பகுதகளை நோக்கி நகரக்கூடும் என எதிர்பார்க்கப் படுகிறது.

கனமழை காரணமாக, நாளை புதுச்சேரி, மற்றும், காரைக்காலில், அனைத்து பள்ளி-கல்லூரிகளுக்கும், விடுமுறை அறிவிக்கப் பட்டுள்ளது.